தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் - 2024
--

1 நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழானஎனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர் களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5. நிதிக் கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைகளின் படி அந்த பெறுமதிகளையும் ஒப்பிடுகையில், சொத்துக்களின் செலவு அல்லது மீள்	கணக்குகளில் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அட்டவணைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	விலகல்களைக் கண்டறிந்து கணக்கு மீதிகள் அல்லது துணை ஆவணங்களைச் சரிசெய்ய நடவடிக்கை

மதிப்பீட்டு பெறுமதியில் ரூ. 25,013,510, திரட்டிய தேய்மான பெறுமதியில் ரூ. 41,617,125 மற்றும் தேறிய பெறுமதியில் ரூ. 15,174,310 வேறுபாடு காணப்பட்டது, மேலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அட்டவணைகளின் படி முட்கரண்டிகள் மற்றும் பிற உபகரணங்களின் திரட்டப்பட்ட தேய்மானக் கணக்கில் ரூ. 324,187 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.	எடுக்க வேண்டும்.

(ஆ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

	விடயம்	தொகை ரூபா	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(i)	நிலையானள் சொத்துக்கள் மற்றும் பெற வேண்டிய மீதிகள்	17,193,681	நிலையான சொத்துக்கள் பதிவேடு, மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள், கோவைகள் மற்றும் ஏனைய பதிவேடுகள்	நிலையான சொத்துக்களுக்கான நிலையான சொத்துப் பதிவேடு பராமரிக்கப் படுவதில்லை என்றும், அட்டவணைகள் பரா மரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தரப்பினர் சில நிலுவைகளை செலுத்த முடியாது என்று கூறியுள்ள தாகவும், சில மீதிகளை அறவிடு வதற்கு நீதிமன்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த தாக.	ஏற்றுக்கொள்ளப்பட்ட படிவத்தின் படி தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டை சமர்ப்பிக்கவும், மீதிகளை சரிபார்க்க தொடர்புடைய கணக்காய்வினால் கோரப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் பிற தகவல்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	பொறுப்புக்கள் மற்றும் மூலதன மானியங்கள்	28,586,540	அட்டவணைகள் மீதி உறுதிப படுத்தும் கடிதங்கள் மற்றும் கோவைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள்	சில மீதிகள் 2025 ஆம் ஆண்டின் பாடநெறிகளுக்கு சமூகமளித்த மாணவர்களிடமிருந்து பாடநெறி கட்டணங்களுக்காக ஈடு செய்வதற்கும் மீதி உறுதிப்படுத்தல் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பித்தல் இடம் பெறுவதாக.	கணக்காய்வுக்கு கோரப்பட்ட அட்டவணைகள் மீதி உறுதிப் படுத்தல்கள் மற்றும் தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் கிடைக்க வேண்டிய ரூபா 922,726 ஆன மீதிகளுக்கு இடையே01 இற்கும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 11,424 ஆன கடன் மீதியொன்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 790,462 ஆன மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.	வெளிவாரி பயிற்சி பாடநெறிகளில் இருந்து பெறவேண்டிய தொகையை இவ்வாண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 145,340 தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. பெறவேண்டிய வீட்டு வாடகை அளவிடுவதற்காக DMR/8082/2012 ஆம் இலக்க கோவை வழக்கு தொடரப்பட்டுள்ளது சட்டமா அதிபரின் ஆலோசனை களை பெற்றுக்கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	பெற வேண்டிய மீதிகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	ரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் ரூபா 15,314,815 செலுத்து வேண்டிய மீதிகளுக்கு இடையே 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய மொத்தம் ரூபா 364,895 ஆக இருந்ததுடன், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 14,949,920 தொகையை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	C.E.C.B நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 7,098,096 தொகை கொடுப்பனவு தொடர்பான தீர்மானம் முகாமைத்துவ சபையிலிருந்து வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பேரில் மேற்கொள்வதற்கு உள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. மீண்டும் செலுத்த வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் ரூபா 23,000 தொகை மற்றும் செலுத்த வேண்டிய விடுதிக் கட்டணங்கள் ரூபா 306,743 தொகையை மீண்டும் செலுத்தாமல்	முறைப்படி பரீட்சித்து செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு அல்லது வருமானத்துக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இருப்பதற்கும் எதிர்காலத்தில் நடைபெறும் பாடநெறிகளுக்காக ஈடு செய்வதற்காக நிறுத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக.

1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்ற வற்றுடனான தொடர்பு		பெறுமதி ரூபா	விபரம்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் வழங்கப்பட்ட 2018 திசெம்பர் 31 ஆம் திகதி 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் நிதி அல்லாத சொத்துக்கள் மதிப்பீட்டு வழிகாட்டி	822,298,888	காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் நிறுவனத்தினால் 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதி இறுதியாக காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது டன் 06 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்தல் இடம் பெற்றிருக்கவில்லை	காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்வதற்காக உதவிச் சேவையை மாகாண இறைவரி திணைக்களத்திடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ள தாக அறிவிக்கப் பட்டிருந்தது.	சுற்றறிக்கை பிரகாரம் சொத்துக்களை மதிப்பீடு செய்து புதிய பெறுமதியை கொம்ப்ரோலர் ஜெனரலுக்கு அறிக்கையிடப்பட வேண்டும்.
(ஆ)	2016 திசெம்பர் 22 ஆம் திகதிய 2004/குச/1(2016 திருத்திய) நூலக மற்றும் ஆவணங்கள் சேவை சபையின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு		சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் நூலக புத்தக மெய்மையாய்வு மீளாய்வாண்டிலும் முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.	அவதானிப்புடன் இணங்குவதாகவும் 2024 ஆம் ஆண்டுக்குரிய நிறுவனத்தின் நூலக இருப்பு கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க ஆரம்பிக்கப்பட்டு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	கணிப்பீட்டு நடவடிக்கை செய்யாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறைப்படி நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய காலப் பகுதியில் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 35,222,227 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,003,434 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 38,225,661 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுகளுக்குரிய பெறவேண்டிய பெறுமதி சேர் வரி மீதான வரித்தொகையான ரூபா 33,026,774 தொகை உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் மீளச் செலுத்தப்படவில்லை என்பதாக அறிவித்ததன் காரணமாக மீண்டும் கணக்குகளில் மேற்கொண்ட சீராக்கம் இந்த குறைவுக்கு பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவன (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 04 ஆம் பிரிவில் காணப்படும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த 2024 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் ஆண்டின் இறுதியில் அதன் செயன் முன்னேற்றத்தை பரீட்சித்த போது நிறுவனம் தாபிக்கப்பட்ட 10 நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்ட 46 பயிற்சி பாடநெறிகள் / தொடர்கள் மற்றும் 8 செயற்பாடுகளுக்கு இடையே 18 பாடநெறிகள்/ தொடர்கள் மற்றும் 06 செயற்பாடுகளும் முழுமையாக செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	எதிர்பார்த்த நிதி ஏற்பாடு கிடைக்காமையால் நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	நோக்கத்துக்குட்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாமை தொடர்பாக முறையாக பரீட்சிப்பதற்கும் எதிர்காலத்தில் இந்நிலைமையை தவிர்ப்பதற்கும் வேலை திட்டம் ஒன்றை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	ஒட்டு மொத்தமாக முகாமைத்துவ திறன் தேவைப்படும் கூட்டுறவு முயற்சிகளை பொறுப்பேற்று முகாமை செய்தல் மற்றும் மாதிரி கூட்டுறவு கிராமங்கள், மாதிரி கூட்டுறவு வியாபார நிலையங்கள் மற்றும் பிரதேச நிலையங்களை தாபித்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் மீளாய்வாண்டிலும் நிறுவகம் கவனம் செலுத்தி இருக்கவில்லை.	நிறுவனத்தின் மீளமைப்பு செய்யும் முன்மொழிவின் அடிப்படையில் இந்த நோக்கங்களுக்காக கவனம் செலுத்தப படவில்லை. இந்த விடயம் தொடர்பில் முன்னுரிமை கவனம் செலுத்தப்பட்டு எதிர் காலத்தில் நடவடிக்கை நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து நோக்கங்களையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் செயற்பாடுகளை திட்டமிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	நிறுவன தாபித்தல் சட்டத்தின் நோக்கம் ஒன்றான நிறுவனத்தின் இலக்குகளுக்கு சமமான நோக்கங்களை நிறைவேற்றும் இலங்கை அல்லது அதற்கு வெளியே	அங்கத்துல கட்டணம் கொடுப்பனவுக்காக 2023 ஜனவரி 21 ஆம் திகதிய NICD/AD/34/	நிறுவனத்தின் செயற்திறனை மேம்படுத்துவதற்கும் தரத்தன்மையுடனான

	அமைப்புக்களுடன் ஒத்துழைப்பு நடவடிக்கை களுக்காக "சர்வதேச கூட்டுறவு அமைப்பின்" அங்கத்துவத்தை பேணி செல்லல் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் நிறுவனம் சர்வதேச கூட்டுறவு அமைப்பின் அங்கத்துவத்தை 2021 ஆம் ஆண்டிலிருந்து நாளாவது வரை ஆக்கப்பட்டு இருக்கவில்லை.	Membership ஆம் இலக்க கடிதத்தின் மூலம் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கு அமைச்சினால் பரிந்துரை கிடைக்காததன் பேரில் அங்கத்துவ கட்டணங்களை செலுத்தப்படவில்லை இது தொடர்பாக முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது	ஆன சேவை ஒன்றை வழங்குவதே நோக்கமாக கொண்டு சட்டத்துக்காக நடவடிக்கை எடுப்பதற்கு தந்திரோபாயமான வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்து உரிய நிறுவனங்களின் ஒத்துழைப்பை அதற்கு அனுசரணையையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஈ)	2009 ஆம் ஆண்டின் போது பல்நோக்கு கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு கிடைத்திருந்த தொகையில் ரூபா 305,589 தொகையும் 2014 ஆம் ஆண்டின் போது பயிற்சி பாடநெறிகளின் தரத்தை அபிவிருத்தி செய்வதற்குாக 6 திட்டத்துக்காக தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து கிடைத்திருந்த தொகையில் எஞ்சியுள்ள ரூபா 744,921 தொகை மற்றும் கேட்போர் கூட நிர்மாணத்திற்காக 2014 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த பணத்திலிருந்து செலவிடப்படாத ரூபா 619,355 தொகையுமாக மொத்தம் ரூபா 1,669,865 தொகை ஆக்கபூர்வமாக பயன்படுத்தாமல் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வங்கி நடைமுறை கணக்கில் விளைவற்று வைக்கப்பட்டு இருந்தது	பயிற்சி பாடநெறிகளின் தரத்தை அபிவிருத்தி செய்வதற்காக தேசிய பாதீட்டு திணக்களத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 6,000,000 தொகையில் அந்த செயற்திட்டத்திற்காக செலவிட்ட பின்னர் எஞ்சிய ரூபர் 744,921 தொகையை இவ்வாண்டின் பாட நெறிகளின் தரத்தை அபிவிருத்தி செய்வதற்கான செயற் பாட்டுக்காக பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப் பட்டிருந்தது. பல்நோக்கு கட்டிடங்கள் நிர்மாணத்துக்கு கிடைத்திருந்த நிதி ஏற்பாடுகளில் நிர்மாணங் களுக்காக ஈடுபடுத்தி மேலும் எஞ்சியள்ள ரூபா 305,589 தொகையை அதில் மேற்கொள்ள வேண்டிய மேம்படுத்தலுக் காக பயன்படுத்தப்பட்ட தாக அறிவிக்கப் பட்டிருந்தது.	நிதி ஏற்பாட்டை விளைவற்ற வகையில் வைத்திருக்காமல் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளாக பயன்படுத்துவதற்கு வேலை திட்டம் ஒன்று தயாரித்து விரைவில் செயல்படுத்த வேண்டும்
(உ)	நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 98 செயற்பாடுகளுக்காக மதிப்பிடப்பட்ட செலவினம் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.	அவதானிப்புடன் இணங்குவதாகவும் 2025 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது அனைத்து செயற்பாடு	முறைப்படி திட்டங்கள் தயாரிக்கப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்து எதிர்காலத்தில்

		களுக்காக மதிப்பிடப்பட்ட செலவினத்தை உள்ளடக்கி தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது மதிப்பிடப்பட்ட செலவினத்தை உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	2024 ஆம் ஆண்டின் செயல் நாடுவடிக்கை திட்டம் நியாயமான காலப்பகுயொன்றில் திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டம் செயல்படுத்திய செயற்பாடுகளை மாத்திரம் உள்ளடக்கி 2024 திசெம்பர் 30 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்டிருந்தது.	அவதானிப்புடன் இறங்குவதாகவும் செயல் நடவடிக்கைத திட்டத்தில் ஏதேனும் விலகல் இருந்தால் அதன் பிரகாரம் நியாயமான கால பகுதிக்குள் அதனை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	முறையற்ற முறைமைகளை நிறுத்துவதற்கு எதிர்காலத்தில் நியாயமான காலப்பகுதி ஒன்று செயல் நடவடிக்கை திட்டத்தை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	நிறுவனத்திளுள் நடத்தப்பட்ட உள்ளக மற்றும் வெளிவாரி பாடநெறிகள் தொடர்பாக பின்பற்றப்பட்ட 2022 ஆம் ஆண்டின் முகாமைத்துவ சபையால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நடைமுறை கோவையின் பிரகாரம் (3) 3.1 இன் பிரகாரம் பரீட்சைகளை நடத்தி நான்கு வாரங்களுக்குள் விடைத்தாள்கள் முதலாவது மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் 16 பாடநெறிகளுக்குரிய 70 பாடங்களின் பரீட்சை விடைத்தார்கள் பரீட்சை பிரிவினால் பரிசோதகர்களுக்கு கையளிப்பதற்காக 01 மாதம் முதல் 05 மாதங்களுக்கு இடைப்பட்ட காலவீச்சிலானி தாமதம் ஒன்று இடம்பெற்று இருந்தமை அவதானிக்கப்பட்டது.	அவதானிப்புடன் இணங்குவதாகவும் முகாமைத்துவ சபையால் பின்பற்றப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நடைமுறை கோவையில் 3.1 இன் பிரகாரம் செயற்படுத்த தாமதான சிக்கல் தற்போது தீர்வு செய்யப்பட்டு தாமதம் இன்றி விடை பத்திரங்களை மதிப்பீடுவ தற்காக பரிசோகர் களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	முறைப்படி நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் காணப்பட்ட தாமதத்தை தவிர்ப்பதற்கு விரைவில் விடைத்தாள்களை மதிப்பீடு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உள்ளக வேலை திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	நிறுவனத்தின் 2023/2024 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட பாடநெறிகளுக்குரிய நடத்தப்பட்ட பரீட்சை விடைத்தாள்களின் மதிப்பீட்டு நடவடிக்கைகள் பரீட்சை நடைமுறைகளின் பிரகாரம் விரிவுரையாளர்களால் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 19 பரீட்சைகளின் விடைத்தார்கள் மதிப்பீடு பூர்த்தி செய்வதற்கு 06 மாதங்கள் மூலம் முதல் 01 வருடம் வரையான காலம் ஒன்று எடுக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது	அவதானிப்புடன் இணங்குவதாகவும் விடை பரிசோதகர்களுக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன தற்போது 2023 ஆம் ஆண்டுக்குரிய விடைத் தாள்கள் மதிப்பீட்டின் புள்ளிகள் பரீட்சை பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளன 2024 ஆம் ஆண்டுக்குரிய சில பாடங்களின் விடைத்தாள் புள்ளிகளை பெற்றுக்	பரீட்சை நடைமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக உரிய பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் காணப்படும் தாமதத்தை தவிர்த்து விரைவில் விடை பத்திரங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கையும் நடவடிக்கை எடுக்கும் விரைவான வேலைத் திட்டம் ஒன்று

	கொள்வதற்கு உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது	தயாரிக்கப்பட வேண்டும்.
(ஐ) தாபன விதி கோவையின் II அத்தியாயத்தின் 13.1.2 பிரிவு 13.4 பிரிவு மற்றும் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறையின் 5.1.1 நியதிகளில் தொடர்பான கவனம் செலுத்தாமல் ஆட்சேர்ப்பு நடைமுறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பட்டப்பின் படிப்பு தகைமை இல்லாத மற்றும் சேவை அனுபவம் பூர்த்தி செய்யாத இரண்டு உத்தியோகத்தர்கள் மீளாயவாண்டில் 02 சந்தர்பபங்களில் பணிப்பாளர் நிர்வாகம் பதவிக்காக பதில் கடமை அடிப்படையில் அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டிருந்தனர்.	அவதானிப்புடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதி நடைபெற்ற 163 ஆவது முகாமைத்துவ சபை கூட்டத்தின் போது இந்த நிறுவனத்தின் வெற்றிடங்களான பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான தலைமை உத்தியோகத்தர் பதவியில் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் அமைச்சு செயலாளரினால் இந்த உத்தியோகத்தர்களை பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளதாக	பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்குரிய தகமைகள் உள்ள உத்தியோகத்தர்களை பதவிகளில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

3.2 செயற்பாட்டு வினைத்தன்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
நிறுவனத்தின் 9 விடுதிகளில் மற்றும் விடுமுறை கேந்திரத்தில் காணப்பட்ட 115 அறைகளில் 12 சதவீதம் முதல் 34 வரை மிகக் குறைந்த அளவு ஒன்று 2024 ஆம் ஆண்டில் பயன்படுத்தப் பட்டிந்தமை அவதானிக்கப்பட்டது.	2024 ஆம் ஆண்டு நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட்ட டிப்ளோமா பாடநெறிகள் நிகழ்நிலை முறைமை ஊடாக நடத்தப்பட்ட காரணத்தினால் அறைகளின் பயன்பாடு குறைவடைந்ததற்கான காரணமாக இருந்ததாகவும் அவ்வாறான வெற்று அறைகளை குறைபப்பயன்பாட்டிலிருந்து தவிர்ப்பதற்காக வெளிவாரி வேண்டுகோள்களின் அடிப்படையில் நிறுவனத்தில் நடத்தும் நிகழ்ச்சி திட்டங்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக	விளைவற்ற வகையில் சொத்துக்களை பயன்படுத்தி வருமானத்தை உழைப்பதற்கு வேலை திட்டம் ஒன்றை விரைவில் தயாரிக்க வேண்டும்.

3.3 விளைவற்ற குறைபயன்பாட்டிலுள்ள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) நிறுவனத்தினால் 1999 ஆம் ஆண்டின் போது ரூபா 2,368,359 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிகளுடன் கூடிய மஹவலி கட்டிட வளவு மற்றும்	மஹவலி கட்டிட வளவினை செயற்திறனாக ஈடுபடுத்துவதற்கு முடியுமான வகையில் பொருத்தமான திட்டமொன்று	குறைபயன்பாட்டிலுள்ள சொத்துக்களை பயன்படுத்தி வருமானம்

	அதற்குரிய காவலர் அறை 2020 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்காமல் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்று காணப்படுவது அவதானிக்கப்பட்டது.	செயல்படுத்துவதற்காக அபிலாசைகள் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதால் அதன் பிரகாரம் பொருத்தமான செயல் திட்டம் ஒன்றுக்காக இந்தவளவை ஈடுபடுத்துவதற்கு உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது முறைப்படி தேவைப்பாடு உள்ள நிறுவனங்களுக்கு கையளித்தல் கையளிக்கப்பட வேண்டும்.
(ஆ)	நிறுவனத்தின் 2025 சதுர அடி அளவுடைய வளவில் 40 கணனிகளுடன் கூடிய 03 கணனி ஆய்வுக்கூடங்கள் 2021 ஆம் ஆண்டு இறுதியில் இருந்து விளைவற்ற வகையிலும் குறைப் பாயன்பாட்டுடனும் காணப்படுவதுடன் அதில் பொருத்தப்பட்டுள்ள சில கணணிகள் செயலாற்ற நிலைமையில் காணப்படுவதும் அவதானிக்கப்பட்டது.	இந்த நிறுவனத்தை மீளமைப்பதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததால் இந்தக் கட்டிடத்தில் உடன்படிக்கை செய்து குத்தகை அடிப்படையில் வழங்காமல் இருக்க தீர்மானிக்கப் பட்டுள்ளதால் மீண்டும் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு முடியுமான வகையில் பொருத்தமான செயற்திட்டம் ஒன்றைச் செயல்படுத்ததற்காக அபிலாசைகள் கோரப்பட்டுள்ளதாகவும். குறிப்பிடப்பட்டிருந்தது	குறைப் பயன்பாட்டுடைய சொத்துக்களை பயன்படுத்துவதற்கு விரைவான வேலை திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டும்.
(இ)	2010 ஆம் ஆண்டில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த 05 மாடிகளுடன் கூடிய 14,403 சதுர அடி அளவிலான பல்நோக்கு கட்டிடத்தின் 10839 சதுர அடியிலான நான்கு மாடிகளும் 2025 ஏப்ரல் 03 ஆம் திகதி வரை 2 ஆண்டுகளுக்கும் 04 இற்குக்கு இடைப்பட்ட காலம் குறை பயன்பாட்டுடன் விளைவாற்று காணப்பட்டது.	இந்த நிறுவனத்தை மீளமைப்பதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததால் இந்தக் கட்டிடத்தில் உடன்படிக்கை செய்து குத்தகை அடிப்படையில் வழங்காமல் இருக்க தீர்மானிக்கப் பட்டுள்ளதால் பல் நோக்கு கட்டிடத்தின் எஞ்சிய வளவை பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் பொருத்தமான செயல்திட்டம் ஒன்றை செயற்படுவதற்காக அபிலாசைகள் அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	குறைப் பயன்பாட்டுடைய சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுத்து வருமானத்தை உழைப்பதற்கு விரைவான வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.
(ஈ)	நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத சேவை பகுதியின் உத்தியோகத்தர்களுக்காக திட்டமிடப்பட்டிருந்த ஓராண்டு கால டிப்ளோமா பாடநெநிக்கு எதிர்பார்க்கப்பட்ட விண்ணப் பதாரிகள் இல்லாமையால் பாடநெறி செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை	அவதானிப்புடன் இணங்குவதாகவும் 2024 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படாத அந்த டிப்ளோமா பாடநெறிகளை 2025 மே மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	செயற்திட்டத்தின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் முறையான ஆய்வு ஒன்றின் பின்னர் உரிய செயற்பாடுகளை செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும்

பாடநெறிகள் தொடர்பாக முன் மதிப்பீடு ஒன்று இல்லாமல் டிப்ளோமா பாடநெறியை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கிய காரணத்தினால் இச்செயற்படுத்தப்படாத பாடநெறி அடிப்படையில் நிறுவனத்தின் 720 விரிவுரை மணித்தியாலங்கள் விளைவற்று இருந்தது.

வெளியில் காணப்படும் கேள்விக்கு பொருத்தமான வகையில் பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
.